**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்,**
**புதுச்சேரி மாநில தோட்டக்கலை வளர்ச்சி சங்கம்**
**தாவரவியல் பூங்கா,**
**புதுச்சேரி.**
****

செய்தி குறிப்பு

**பொருள்:** வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை – தோட்டக்கலை – புதுச்சேரி மாநில தோட்டக்கலை வளர்ச்சி சங்கம் -தோட்டக்கலை விவசாய பயனாளிகள் – தணிக்கைப்பட்டியல் வெளியீடு – சம்மந்தமாக.

*****

புதுச்சேரி அரசு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, தோட்டக்கலை அலுவலகம் மற்றும் புதுச்சேரி மாநில தோட்டக்கலை வளர்ச்சி சங்கம் வாயிலாக தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் "தோட்டக்கலை இயந்திரமயமாக்கல்" திட்டத்தின் கீழ் புதுச்சேரி பிராந்திய தோட்டக்கலை விவசாயிகளுக்கு "விசைத்தெளிப்பான்கள்" 50% மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

விசைத்தெளிப்பான் மானிய விலையில் பெறுவதற்கு விண்ணப்பித்த தகுதியான விவசாயிகளின் பெயர் பட்டியல், சமுதாய தணிக்கை செய்வதற்காக புதுவையில் உள்ள தங்கள் பகுதிக்குட்பட்ட உழவர் உதவியகங்களின் "அறிவிப்பு பலகையில்" **14/09/2020** முதல் **24/09/2020** வரை ஒட்டப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரி வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையதளத்திலும் (https://agri.py.gov.in) வெளியிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பட்டியலில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வரும் **24/09/2020** தேதிக்குள் புதுச்சேரி தாவரவியல் பூங்காவில் உள்ள வேளாண கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகத்தில் எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**(மு. வேதாசலம்)**
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை)**